முருகப்பெருமான் துணை
அருட்பெருஞ்சோதி! அருட்பெருஞ்சோதி!! தனிப்பெருங்கருணை!
அருட்பெருஞ்சோதி!!

# ஆன்மீகத்தில் அரசியலையும், அரசியலில் ஆன்மீகத்தையும் கரை கண்டவர் முருகப்பெருமான்

**எதிர்காலம் குறித்த**

**இந்தியா, தமிழகத்தில் இந்த வார நிகழ்வாக எதிர்கால பலன் குறித்த**

**மகான் அகத்தியர் அருளிய வார ஆசி நூல்**

**பிலவ வருடம் ஐப்பசி மாதம் 21ம் திகதி முதல் ஐப்பசி மாதம் 28ம் திகதி வரை**

**(07.11.2021 ஞாயிறு முதல் 14.11.2021 ஞாயிறு வரை)**

சுவடி வாசித்தளித்தவர் T.ராஜேந்திரன், M.A.,B.Ed.

1. தவமோடு தருமபலம் கூட்டி
   தரணி காக்க கந்தவேலன்
   அவதாரமாக வந்த அரங்கமகானே
   ஆசியாக இந்தியா தமிழகம்தன்னில்
2. தன்னிலே பிலவதுலை திங்கள்
   தக்க மூவேழுதிகதி மேல் எழுநான்கு திகதிவரை
   இன்னாளில் நடக்கும் வாரநிகழ்வாக
   எதிர்கால பலன்குறித்துக் கேட்க
3. கேட்கவே அகத்தியனும் ஆசியுரைப்பேன்
   குறிப்பாக தமிழகம் தன்னில்
   கட்டுப்படா அதிகார வர்க்கங்கள்
   களவுகள் கையூட்டு அனைத்தும்
4. அனைத்தும் வெளிப்பட்டு பின்னே
   ஆளுமைக்கும் அதன் நிலைமை
   இனிதொடரா காக்கும் வண்ணம்
   ஏற்றத் தலைமையாக மாற்றம்பெறும்
5. மாற்றம்தரும் வண்ணம் நீதியும்
   மாண்புடன் மறுவடிவம் பெறும்
   ஆற்றலாக திரும்பவும் பேரவை
   அழிவுக்கிருமி வழி வந்தாலும்
6. வந்தாலும் அரசு கடைப்பிடிக்கும்
   வழிமுறையோடு மக்கள் மனபலம்
   வந்தச் சுவடறியா மீளுமப்பா
   வருங்காலத் திட்டங்கள் வெற்றிபெற

7. வெற்றிபெற இந்தியா தமிழக
விளம்புவேன் ஆளுமை தானும்
மாற்றம்தர வந்த அரங்கஞானி
மார்க்கம் வந்து வணங்கி
8. வணங்கி வள்ளல் தன்மைபட
வடிவேலன் வழிபாட்டை செய்து
இணங்கி தரும ஞானம்தனை
ஏற்றுமே ஆளுமை நடத்த
9. நடத்தவே மக்களின் தேவைகள்
நடந்தேறி பாதுகாப்பு மிக்க
இடரை கடந்து எல்லாவகையும்
ஏற்றம் தரும் ஞானஆட்சியாக
10. ஆட்சியாக இந்தியா தமிழகம்
ஆறுமுகன் ஆசிபடச் சிறந்து
மாட்சிமைபுரியும் மண்ணுலகம் வியக்க
மொழிந்திட்ட வார ஆசி முற்றே

–சுபம்–

முருகப்பெருமான் துணை

மகான் அகத்திய மகரிஷி அருளிய வார ஆசி நூலின் சாரம் :

பிலவ வருடம் ஐப்பசி மாதம் 21ம் நாள் 07.11.2021 ஞாயிற்றுக் கிழமை முதல் ஐப்பசி மாதம் 28ம் நாள் 14.11.2021 ஞாயிற்றுக் கிழமை முடிய உள்ள நிகழ்வுகள் :

எல்லையில்லாது தவங்களை பலப்பல ஜென்மங்களிலே செய்து பெற்ற தவபலத்துடனும், தர்ம பலத்துடனும் இவ்வுலகினில் கலியுகத் துன்பத்தில் துன்புறும் மக்களை மீட்கவே முருகப்பெருமானின் அவதாரமாக அவதரித்திட்ட ஆறுமுக அரங்க மகா தேசிகனே உமக்கு ஆசி கூறும் விதமாக இந்தியாவிலும் தமிழகத்திலும் பிலவ வருடம் ஐப்பசி மாதம் 21ம் நாள் 07.11.2021 ஞாயிற்றுக் கிழமை முதல் ஐப்பசி மாதம் 28ம் நாள் 14.11.2021 ஞாயிற்றுக் கிழமை முடிய உள்ள காலத்தில் நடக்கவிருக்கும் நிகழ்வுகளை அரங்க மகான் கேட்க வார ஆசி நூலாக அகத்திய மகரிஷி யானும் உரைக்கின்றேன் என்கிறார் மகான் அகத்திய மகரிஷி.

கட்டுப்பாடுகள் இன்றி மனம் விரும்பிய வகையில் செயல்பட்டு சுயநலமாய் செயல்பட்டு பொது சொத்தை அபகரித்தும், லஞ்சலாவன்யங்களை செய்தும் வந்த அதிகார வர்க்கத்தினர் பின்னாளில் அவர்கள் செய்திட்ட அபகரிப்புகளும், லஞ்சலாவன்யங்கள் எல்லாம் வெளிப்பட்டு தண்டனைக்கு உள்ளாவார்கள் அவர்கள் ஆட்சி பொறுப்பில் அங்கம் வகிப்பவராக இருப்பினும் அவர்களது குற்றங்களும் உலகினில் வெளிப்பட்டு தாழ்வுநிலை உண்டாகும்.

இத்தகைய சூழ்நிலைகள் வாராது காக்கும் விதமாக ஆட்சி பொறுப்பில் உள்ளோர் செயல்பட இந்த தேசத்தை ஆள்பவர்களின் நிலை உயர்வான தலைமையாக மாற்றம் பெறும். ஆட்சி முறையே நீதிக்குட்பட்ட மாண்புடன் மறுவடிவம் பெறுமப்பா.

நாட்டினில் குறைந்து வரும் நச்சுக் கிருமியின் தாக்குதல் மீண்டும் வேகம் எடுத்து அலையாக பேரலையாக வந்தாலும் அரசு மக்கள் கடைப்பிடிக்க கூறும் வழிமுறைகளை மக்கள் அனைவரும் உடன்பட்டு ஏற்று கடைப்பிடித்திடுவதோடு மனோபலத்துடன் நோயை எதிர்கொள்ள நச்சுக் கிருமி தாக்குதல் வந்த சுவடு தெரியாமல் மறைந்து போகும்.

எதிர்கால நலனிற்காக போடப்படும் திட்டங்கள் எல்லாம் தோல்வி அடையாமல் வெற்றபெற வேண்டுமாயின், நாடு நல்ல பாதையில் சென்று வளம்மிக்க நாடாக ஆகிட வேண்டுமெனில் இந்தியா தமிழக ஆளுமைகள் எல்லாம் உலகினில் மாற்றம் செய்ய அவதரித்திட்ட ஆறுமுக அரங்க மகான் கூறும் தூய தர்ம ஞான நெறிமுறைகளை, சன்மார்க்க நெறிகளை ஏற்று தயவுடன் ஞானமோடு ஆட்சி செய்வதுடன் கடவுள் நம்பிக்கை கொண்டு நடந்து ஞானத்தலைவன் முருகப்பெருமானை வணங்கி வழிபாடுகளை செய்வதுடன் தாராளமாய் தர்மங்களையும் செய்து வர வேண்டும்.

இவ்விதமே ஆட்சி பொறுப்பில் அதிகாரத்தில் உள்ளவர்கள் கருணையும், தயவும் கொண்டு தர்ம வழியில் நடந்திட மக்களின் தேவைகள் எல்லாம் பூர்த்தியாகி பாதுகாப்பு மிக்க தேசமாக மாறி துன்பங்களைக் கடந்து சென்று வளர்ச்சி பாதையில் சென்று வெகுவிரைவாக முன்னேறி ஏற்றம் மிக்க ஞான ஆட்சியாக இந்தியா தமிழகம் மாற்றம் அடைந்து முருகப்பெருமானின் அருளாசிகளையும் அடைந்து இந்த உலகமே வியக்குமாறு நல்லாட்சி நடைபெற்று மக்களும் நாடும் சுபிட்சமாக வறுமையற்ற தேசமாக வளமும், பலமும், பாதுகாப்பும் நீதியும் மிக்க தேசமாக மாறிடும் எனக் கூறுகிறார் மகான் அகத்திய மகரிஷி.

–சுபம்–